சிந்தனை
தொகுதி vi இதழ் iii – 1994

# அறிவும் உணர்வும் அரசியலும்: பௌத்தம் துரோகம் செய்தது?

## நூல் தடை விவகாரம் – ஒரு மீளாய்வு

என். சண்முகலிங்கன்

இலங்கையில் சமயம், அரசியல் வன்முறை தொடர்பான பேராசிரியர் ஸ்ரான்லி ஜே. தம்பையா அவர்களின், 'பௌத்தம் துரோகம் செய்தது' என்ற நூல் தடை விவகரரம், அரசியலிலும், அறிவுலகிலும் பரபரப்பூட்டிய விடயமாகும். உலகப் புகழ்பெற்ற மானுடவியல் அறிஞரான பேராசிரியர் தம்பையாவின் நூலை தடை செய்யக்கோரும் கண்டனங்கள், தடை நடவடிக்கைகள் தொடர்பானதொரு மீள்ஆய்வாக இக்கட்டுரை அமைகின்றது.

**2. 1.** அறிஞர்கள் மீது அல்லது புதிய ஆய்வு முடிவுகள் மீது சேறு வீசுவது, அல்லது அவர்களை தடை செய்வது என்பது உலகப் பொதுவான ஓர் அறிவுலக அனுபவமாக பதியப்படுவது. மரபும் அதிகாரமும் தொடர்பான இன்றைய முறையியல் அறிவு இதனை துல்லியமாக காட்டி நிற்கும். (Babbie, 1975). இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. குறிப்பாக முரண் அரசியல் கருத்துக்களை தணிக்கை செய்வது அல்லது தடைசெய்வது என்பது சாதாரணமானது. எனினும் விஞ்ஞான முறையியலின் வழியான ஆய்வு நூல் ஒன்றுக்கு தடை என்பது இலங்கையை பொறுத்தவரை முதல் அனுபவம். பேராசிரியர் தம்பையாவின் இந்நூல், பௌத்த தேசிய வாதக் கருத்துநிலையை, மானுடவியலின் முழுதளாவிய அணுகுமுறையின் வழி (Holistic app:oach) விமர்சிப்பது.

2.2. 'சிங்கள பௌத்தம்' என பேசப்படும் உணர்வு நிலையின் விளைவுகளை ஆராயும் இந்நூலை, பௌத்தத்துக்கு எதிரான ஒரு நூலாக காட்டுவதே எதிர்ப்பாளர்களின் அடிப்படையாக இருந்தது. பாராளுமன்றம், பத்திரிகை, ஊர்வலம் என இந்த விவகாரம் பல்வேறு ஊடகங்களின்வழி வெளிப்படுத்தப்பட்டது. அரசியல் வாதிகளிலிருந்து பல்கலைக்கழக அறிஞர்கள் எனப்படுபவர்கள் வரை இதில் சம்பந்தப்பட்டிருந்தனர். பல்கலைக்கழக மட்டத்தில் இதில் ஆதரவு தந்தவர்களில் குறித்த நூற்புலமான மானுடவியல் அறிவு சார் புலமையாளர் எவரும் இல்லையென்பதும் இங்கு கவனத்திற்குரியது.

அதேவேளை பேராசிரியர் எஸ். ஜே. தம்பையாவுக்கு ஆதரவான குரல்களும் சூட்டோடு சூடாக இங்கு வெளிப்பட்டமையும் இங்கு சிறப்பாக குறிப்பிடப்பட வேண்டியது. இந்த ஆதரவு அணியில் பேராசிரியர் கணநாத் ஒபயசேகர உட்பட பல உலகப் புகழ்பெற்ற மானுடவியல் அறிஞர்கள், ஏனைய சமூக அறிவியலாளர்கள் இருந்தமையும் இங்கு கவனத்திற்குரியது.

2.3. பேராசிரியர் தம்பையாவின் இந்த நூல்தான் பௌத்தமதம் பற்றிய, அதன் அரசியல் வன்முறை நடைமுறைகளை விமர்சிக்கும் முதல் நூல் அல்ல. பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தனா, பேராசிரியர் கணநாத் ஒபயசேகர, பேராசிரியர் ரிச்சட் கொம்றிச், பேராசிரியர் புருஸ் காப்பர் போன்றோரின் மானுடவியல் ஆய்வுகள் பல, பௌத்தம் பற்றியும், பௌத்த குருமாரான பிக்குமாரின் வன்முறை ஈடுபாடு தொடர்பாகவும் நிறைய எழுதியிருக்கின்றன.

'' நீண்ட பௌத்த வரலாற்றில், ஒரு நூலைத் தடை செய்ததோ, எரித்ததோ நிகழ்ந்ததில்லை. அண்மையில் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட துர்ரதிஷ்டவசமான சம்பவம்வரை வேறுபதிவு இல்லை. சிங்கள பௌத்தத்தை காக்க எனது நூல்களையும் எரியுங்களேன்'' என பேராசிரியர் கணநாத் ஒபயசேகர (1993) தம்பையாவுக்கு ஆதரவாக வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டமை இங்கு எமது கவனத்துக்குரியதாகும். இத்தகைய பின்னணியில் பேராசிரியர் தம்பையாவின் நூலுக்கு மட்டும் ஏன் எதிர்குரல் என்பது இங்கு ஆர்வத்துக்குரிய கேள்வியாகும்.

2.4. பேராசிரியர் தம்பையா, இன்று நிலவும் மானுடவியல் அறிஞர் குழாமில் முதன்மையானவர்களில் ஒருவராக மதிக்கப்படுபவர். இப்பொழுது உலக புகழ்பெற்ற சமூக மானுடவியல்துறை வளர்ச்சி மையங்களில் ஒன்றான ஹாவாட் பல்கலைக்கழகத்தின் மானுடவியல் பேராசிரியர். பௌத்தமே, அவரின் சிறப்பான ஆய்வு ஆர்வமுமாகும். தென் ஆசிய, தென்கிழக்காசிய புலங்களில் தேரவாத பௌத்தத்திற்கும் அரசுகளுக்கு மிடையிலான தொடர்பினை அவரது ஆய்வுகள் சிறப்பாக வெளிப்படுத்துவன. அறிவுலக அங்கீகாரத்தை பெறுவன.

அசோகன் கால தேரவாத பௌத்த மகிமையை விளக்கும் அவரது 'World Conquerer, World Renouncer' எனும் நூலை வியந்து, பேராதனைப் பல்கலைக் கழகம் D. Lit சிறப்பு கலாநிதி பட்டம் வழங்கி கௌரவித்த சில காலத்திற்குள் இந்த சேறு பூசும் விவகாரம் நடந்தமையும் இங்கு சிறப்பான கவனத்துக்குரியன.

கௌரவத்துக்கு காலான நூல், பௌத்த அரசர்களை தர்மராசாக்களாகச் சித்திரிப்பது. ஆனால் தடை விவகாரத்துள் சிக்கிய புதிய நூல், இன்றைய கால பௌத்த பிக்குக்களின் அரசியல் ஈடுபாட்டினை விமர்சிப்பது. குறிப்பாக சிங்கள தேசிய வாதம், தமிழர்களுக்கு எதிரான வன்முறை என்பவற்றுடன் பௌத்தத்தை தொடர்புபடுத்தி, இலங்கையில் மட்டும் ஏன் இவ்வளவு தூரம் வன்முறை, உயிர்க் கொலை, மனித உரிமை மீறல். 'பௌத்தம் துரோகம் செய்தது?' என அவர் எழுப்பும் வினாவே, அவரை தடைசெய்யும் எதிர்ப்புகளின் அடிப்படையானது. கலாநிதி ஜெயதேவ உயங்கொட (1993) குறிப்பிடுவதுபோல, நூலின் தலைப்பில் வினாக் குறியுடன் 'பௌத்தம் துரோகம் செய்தது? என எழுப்பப்பட்ட வினாக்குறியை, கண்டனகாரர்கள், கண்டுகொண்டதாக இல்லை. கண்மூடித்தனமாக தம்பையாவை தாக்குவதே அவர்கள் நோக்கானது. தம்பையாவோடு சேர்ந்து இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய கலாநிதி லால் ஜெயவர்த்தனா எதிர்கொண்ட கண்டனமும் இவர்களின் உணர்வு நிலைப்பாட்டை துல்லியமாக்குவது. 'தமிழனான தம்பையாவின் நூலுக்கு முன்னுரை எழுதி சிங்கள தேசத்தைக் காட்டிக்கொடுத்த துரோகி' என்ற விதமாகவே லால் ஜெய

வர்த்தனாவுக்கு பட்டம் சூட்டப்பட்டமையை காணலாம்.

3. தொகுத்து நோக்குகையில், இந்நூல்தடை விவகாரத்தின் பின்னணியாக பின்வருவனவற்றை இனங்காண முடியும்.

**3. 1. கண்டனங்களுக்குள்ளான பேராசிரியர் தம்பையாவின் இனமூலம்**

உலகப்புகழ், இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஒன்றான பேராதனை பல்கலைகழக சிறப்பு கலாநிதி பட்டம், என்பவற்றுக்கு மேலாக அவர் ஒரு தமிழரார்க அதுவும் யாழ்ப்பாண தமிழராக போனமை இந்த விமர்சனங்களிடை தெற்றென புலனாகும். ஒரு தமிழன் நூலுக்கு முன்னுரை எழுதி சிங்கள இனத்தை காட்டி கொடுத்தாயே துரோகி' என லால் ஜெயவர்த்தனா வாங்கிய கண்டனத்துக்குள்ளேயே இதனை இலகுவாய் தெளியமுடியும்.

பௌத்தம் பற்றியும், பௌத்த பிக்குமாரின் அரசியல் பற்றியும் விமர்சித்து ஏனைய ஆய்வாளர்களுக்கு நேராத கதி தம்பையாவுக்கு நேர்ந்ததிலும் இந்த விடயம் வெளிப்படும்.

**3. 2. பேராசிரியர் தம்பையாவின் புலமைப் பலமும், உலகளாவிய அங்கீகாரமும்:**

ஏற்கெனவே குறிப்பிட்டவாறு பேராசிரியர் தம்பையா, உலக புகழ்பெற்ற ஹாவாட் பல்கலைக்கழக மானுடவியல் மையத்தின் தலைமைப் பேராசிரியர், இதனைவிடவும் ஆய்வுச்சிறப்பு மிக்க சிக்காகோ, கேம்பிரிஜ் பல்கலைக்கழகங்களுடன் தொடர்பு கொண்டவர். எல்லாவற்றுக்கும் மேலாக மிகநீண்ட காலமாக பௌத்தம் தொடர்பான ஆய்வுகளின் வழியே அறிவுலகில் தன்னை நிலைநாட்டிக் கொண்டவர். இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழகம் அவரை, அவரது ஆய்வுப் புலமைக்கென்றே கௌரவித்துமுள்ளது. இந்நிலையில் அவரது ஆய்வு முடிவுகளுக்கு உலக அரங்கில் உள்ள செல்வாக்கு உறுதியானது 'பௌத்தம் துரோகம் செய்தது?' என அவர் எழுப்பும் கேள்வி நியாயமாகின்ற போது, பலரது உணர்வு நிலைகள், மதிப்புக்களும் கேள்விக்குள்ளாவது இயல்பானது. இத்தகையோரின் ஒன்று கூடலாகவே இந்த கண்டனங்களும் வெளிப்பட்டமையைக் காணலாம்.

**3. 3. வளர்ச்சி காணும் புதிய அரசியல்சார் மானுடவியலின் (Political Anthropology) புதிய தரிசனங்கள் தொடர்பான அறியாமை அல்லது அவற்றினை உணரும், ஏற்கும் பக்குவமின்மை**

கௌரவ கலாநிதி, அகௌரவப்படுவதற்கு அவரின் புதிய நூல் எழுப்பிய கேள்வி மட்டும் காரணமாக அமையாமல், அண்மைக்காலங்களில் அவரது உரைகளிலும் ஆய்வுகளிலும் வெளிப்படுத்தப்பட்ட அரசியல்சார் மானுடவியல் கருத்தியலும் அவரை தடைசெய்யும் புதிய சர்ச்சையில் முக்கிய இடம்பெறுவதை உணரமுடியும்.

பேராசிரியர் தம்பையா தொடர்பான சேறுபூசல்களுக்கெதிராக அவருக்கு ஆதரவாக ஓர் அறிஞர் குழாம் உடனடியாக குரல் தந்தமை குறிப்பிடத்தக்கதோர் நடவடிக்கையாக பதிவு பெறுவது. இந்த கண்டன வேளை அதிஷ்டவசமாக கொழும்பில் விடுமுறையில் தங்கியிருந்த பேராசிரியர் கணநாத் ஒபயசேகர இந்த அணிக்கு தலைமைதாங்கியமையும், இந்த எதிர்க் குரலை பலமாக்கிய ஓர் அம்சமெனலாம். வழமையாக பிரச்சினைகளை கிளறிவிடும் 'தேசிய' பத்திரிகைகள், எதிர் கருத்துக்களுக்கு உரிய இடம் தருதல் மிகவும் அரிதானது. எனினும் இந்த விவகாரத்தில் நிலைமை மேம்பட்டே காணப்பட்டது. எனினும் இறுதியாக வெளியிட்ட தம்பையா ஆதரவு அறிஞர் அறிக்கை.

'பிரிவினைவாதத்திற்கு தம்பையா எதிரானவர்' (Sunday Island 2.1.94) என்ற மகுடத்துடனேயே பிரசுரமானமை இங்கு சிறப்பான கவனத்திற்குரியது.

கூர்மையடைந்துள்ள இலங்கையின் தேசிய இனத்துவ நெருக்கடி தொடர்பாக அரசியல்வாதிகள் மத்தியில் மட்டுமன்றி அறிஞர்குழாத்திடையும்கூட தெளிவின்மை காணப்படுவதும், பல அறிஞர்கள் உணர்வுவழி அறிவிழந்து போவதும் கூட, பல போலி ஆய்வு அறிக்கைகளின் வழி (Psudo-research reports) வெளிப்படுவதை காண முடியும்.

இலங்கையின் இன்றைய நெருக்கடி தொடர்பான தம்பையாவின் கருத்தியல், 'இனத்துவம்' 'பண்பாடு' என்ற வரையறைகளைத் தாண்டி, அரசியல்சார் மானுடவியல் (Political Anthropology) என்ற கிளை விரிவூடு வளர்ச்சி காணும் மானுடவியலின் புதிய தரிசனங்களை வெளிப்படுத்துவது.

'' பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளில் தேசிய அரசு உருவாக்கலில் மூன்று கட்டங்களை காணலாம். முதலாவது கட்டம், காலனித்துவத்தை நீக்கும் போக்கைக் கொண்டது. இந்தியா, அல்ஜீரியா, கென்யா போன்ற பல நாடுகளில் பலாத்கார அல்லது சமாதானப் போராட்டங்கள் தேசத்தின் தோற்றத்துக்கு முன்னோடியாக அமைந்தன.

இலங்கையிலும், பர்மாவிலும் அதிகார மாற்றம் ஒப்பீட்டளவில் சமாதானபூர்வமாக அமைந்திருந்தது. மக்கள் மனங்களில் தேசிய உணர்வை இவை ஊட்டின. இரண்டாவது கட்டம் தேசிய நிர்மாணமாகும். '50 களிலும் 60 களிலும் ''தேசிய இறைமை'', ''தேசிய கலாசாரம்'', ''தேசிய ஒருமைப்பாடு' ஆகியனவே சுலோகங்களாக அமைந்தன. இக்கட்டத்தில் அரசியல் கட்சிகள் தத்தமது தனியான நலன்களுக்கு அழுத்தம் தருவதற்குப் பதிலாக ஒத்துழைக்க விரும்பின. இலங்கையில் தமிழர்கள், முஸ்லிம்கள் உட்பட பல்வேறு குழுவினர் டி. எஸ். சேனநாயக்காவோடு ஐக்கிய கட்சி ஒன்றினையும் அரசாங்கத்தையும் ஸ்தாபிக்க ஒன்று சேர்ந்தனர். பொது சுபீட்சம், பொருளாதார முன்னேற்றம் ஆகிய கனவுகளால் அவர்கள் உந்தப்பட்டனர்.

மூன்றாவது கட்டத்தில் இந்த தேசிய நிர்மாணக்கட்டம் பெரும் கேள்விக்குறியாக்கப்பட்டது.1960 களிலிருந்து இனமுரண்பாடுகள் தோற்றம் பெற்றன. பிரிவினைச் சக்திகள் மொழி, இனம், சமயம் பிராந்தியம் ஆகியவை முன்னுக்கு வந்தன. குழுக்கள், இனமுரண்பாடுகள், பன்மைச் சமுதாயம், அதிகாரப்பரவலாக்கம், பாரம்பரிய தாயகங்கள் ஆகியவை புதிய கோஷங்களாயின (தம்பையா, 1992)

'நெருக்கடியிலுள்ள தேசிய அரசும், இனத்தேசியவாத எழுச்சியும்' என்ற தலைப்பிலான பேராசிரியர் தம்பையாவின் கருத்துநிலை, உலகின் இனத்தேசியவாத நெருக்கடிகளை சமூக மானுடவியல் நோக்கில் தெளிவுபடுத்துவது; எமது நிலைமையை விளங்கவும் துணையாவது.

விஞ்ஞான முறையியலின் வழி பிரச்சினையை விளங்க முடியாத அல்லது விளங்க விரும்பாத போலி அறிவியலாரும், அரசியலாரும் சந்திக்கும் புள்ளி இதுதான். பௌத்த மதத்திற்கு எதிரானவராகத் தம்பையாவைக் குற்றம் சாட்டுவதன் மூலம், அரசியல் தொடர்பான அவர் அறிவியலுக்கு எதிரானோர் அணியைத் திரட்டுதலும் இலகுவாகலாம். இத்தகு

*சர்ச்சைகளின் மையங்களாக, மக்கள் தொடர்புசாதனங்கள் பெருமளவில் பயன் படுத்தப்படுவதும் இந்தப் பின்னணியில் தான்.*

*ஒட்டுமொத்தமாக நோக்குகையில் அறிவை உணர்வும் அரசியலும் விழுங்கப் புறப்பட்ட சம்பவமாக, தம்பையாவின் பௌத்தம் துரோகம் செய்தது? - நூல் தடை விவகாரம், சமூக ஆய்வு முறையியல் மாணவர்களினதும் சிறப்பான கவனத்திற்குரியதாகின்றது.*

□


**உசாத்துணை**

Babbie, Earl R — 1975 — **The Practice of Social Research,** *Wadsworth Publishing company, Enc., California.*

Obeyesekere, Gananath — 1993 — **Sunday Island,** *Colombo* 28-11-93

Tambiah, S. J — 1992 — **Buddhism Betrayed? Religion, Polity and violence in Sri Lanka,** *Chicaco Univ Press*

Uyangoda, Jeyadeva — 1993 — **Sunday Island,** *Colombo.* 12-12-93

**தம்பையா, ஸ்டான்லி** — 1992 — 'இனத்தேசிய வாதம்...' **தினகரன்** *வாரமஞ்சரி, கொழும்பு.* **30-03-92**